பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 13 | ஞாயிற்றுக்கிழமை | 26.01.2025 | அதிர்வு 177

## யோஷிதவுக்கு விளக்கமறியல்



குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி 05

# நல்லாட்சிக் காலத்தின் அரசமைப்பு வரைவை நிராகரித்தது தமிழரசு

## பதில் தலைவர் சிவஞானம் தெரிவிப்பு கஜேந்திரகுமாரைச் சந்தித்த பின்னர்

(எஸ்.நிதர்ஷன்)

“2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் (நல்லாட்சி காலத்தில்) வரையப்பட்ட புதிய அரசமைப்பு வரைவு பற்றி நாங்கள் பேச வேண்டிய தேவை இல்லை. அது ஏற்கனவே கைவிடப்பட்டாயிற்று. புதிய அரசமைப்பு மற்றும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பான கலந்துரையாடலுக்குக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. வழங்கிய அழைப்புக் கடிதம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் குழு சாதகமாகக் கலந்துரையாடி மேல் நடவடிக்கை எடுக்கும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். 05



05

# அநுர அரசுக்குப் பதிலடி கொடுக்க எம்மிடத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் காட்ட வேண்டும்

## தமிழ் எம்.பிக்களுக்குக் கஜேந்திரகுமார் அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“அரசமைப்பு விவகாரத்தில் தம்மிடமுள்ள அறுதிப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு தாம் விரும்பியதை எங்களிடம் திணிக்க ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றார்கள். அரசு கொண்டுவர யோசிக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் முதற்கட்டமாக எதிர்ப்பதற்கு எங்களிடத்தில் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் காட்ட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றோம்.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 05





தனக்கு வழங்கப்பட்ட முப்படைப் பாதுகாப்பு நாட்டின் அரந்த் தலைவரின் பணிப்பில் அதிரடியாக குறைக்கப்பட்டமையை ஆட்சேபித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்தார் அல்லவா?

அதனை அடுத்து, ‘தென்னையில் தேள் கொட்ட, பனையில் நெறி கட்டியமை போல’ மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் – முன்னாள் கடற்படை அதிகாரி – யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இரத்மலானையில் யோஷிதவின் பாட்டியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை அவரது பாட்டியார் யோஷிதவுக்கு நன்கொடையாக அளித்துள்ளார். அந்தக் காணிக் கொள்வனவு இடம்பெற்றதாகத் தெரிவித்து, அதை ஒட்டி பணப்பரிமாற்ற மோசடி இடம்பெற்றதாகத் தெரிவித்து இப்போது அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவ்விவகாரம் தொடர்பில் யோஷித ஏற்கனவே ஒரு தடவை விசாரிக்கப்பட்டு இருந்தார். 05

# 18 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கைது

(ந.லோகதயாளன்)



இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த 18 இந்திய மீனவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 18 இந்திய மீனவர்கள் இரண்டு படகுகளில் கிளிநொச்சி கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இன்று காலை கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர்.

அதன்பின்னர் அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவர்.

# விபத்தில் படுகாயமடைந்த லொறி உதவியாளர் சாவு!



தலைமன்னார், கட்டைப்பறிச்சான் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் படுகாயமடைந்த லொறியின் உதவியாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மாத்தளையைச் சேர்ந்த வெலகெதர நிசான் சானகா (வயது 34) என்ற இளைஞராவார்.

மேற்படி இளைஞர் லொறி ஒன்றில் உதவியாளராகக் கடமை புரிந்தார். அந்த லொறி கடந்த 14 ஆம் திகதி பயணித்துக் கொண்டிருந்தபோது தலைமன்னர் – கட்டப்பறிச்சான் பகுதியில் சாரதியின் நித்திரைத் தூக்கம் காரணமாக மரத்துடன் மோதியது. இதன்போது உதவியாளர் படுகாயமடைந்தார். ஆனால், சாரதி காயமின்றி தப்பினார்.

இதில் படுகாயமடைந்த லொறி உதவியாளர் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார்.

சாட்சிகளைத் தலைமன்னார் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# கனடாவிலிருந்து யாழ். வந்த ஆராய்ச்சியாளர் திடீர் மரணம்



யாழ்ப்பாணத்தில் விவசாய ஆராய்ச்சி குறித்து உரையாடிக் கொண்டிருந்த ஆராய்ச்சியாளர் நேற்று திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். கோப்பாய் – கட்டைப்பிராய் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை ரவிச்சந்திரநேசன் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 13 ஆம் திகதி கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவர் கனடா பல்கலைக்கழகத்தில் ஒரு விவசாய ஆராய்ச்சியாளராக உள்ளார்.

நேற்று பல்கலைக்கழக விரிவுரியாளருடன் ஸூம் தொழில்நுட்பமூடாக ஆராய்ச்சி குறித்து கலந்துரையாடிக் கொண்டிருந்தார். இதன்போது திடீரென மயங்கி கீழே வீழ்ந்தார்.

இந்நிலையில் அவரை யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்த வேளை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரணம் விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். கோப்பாய் பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

அன்னாரின் சடலம் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரின் சகோதரனான வடக்கு மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனின் திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கனடாவுக்கு அனுப்பப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பெண்களின் உள்ளூர் உற்பத்தியை முன்னேற்ற சுயதொழில் கண்காட்சி

(பா.சதீசன்)

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கோடு 2025ஆம் ஆண்டுக்கான என்.எல்.எப் பஷன் கடைத் தொகுதி திறந்து வைக்கப்பட்டதுடன் சுயதொழில் விற்பனையும், பொங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

தற்காலத்தில் பெண்களின் கைத்தொழிலினை மேம் படுத்தி பெண்களை வருமானமீட்டும் வகையில் முன் உதாரணமாக புதியவாழ்வு நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு, தெல்லிப்பளை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

புதியவாழ்வு நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரான செல்வி துரைச்சாமி திலகவதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவித்து, பொங்கல் நிகழ்வு இடம்பெற்று, என் எல்.எப்.பஷன் கடைத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் சுய தொழில் முயற்சியாளர்களின் பொருள்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்ட பின்படிப்பு பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி அதிபர் சி.திரிகரன், வலிகாமம் உதவி பிரதேச செயலாளர், புதிய வாழ்வு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் விஜயலாதன், நிறுவன பிரதிநிதிகள், யாழ்வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் 89 ஆம் அணி புலம்பெயர் பழையமாணவிகள், சுயதொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்












# முன்னாள் ஜனாதிபதிக்கு இல்லம் வழங்கவேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை: நளிந்த ஜயதிஸ்ஸ



முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட வேண்டும் என்று அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசமைப்பில் ஏற்பாடுகள் உள்ளது என எண்ணிக் கொண்டே முன்னாள் ஜனாதிபதிகள் சிலர் உத்தியோக பூர்வ இல்லங்களில் வசித்து வருகின்றனர்.

நாம் அறிந்தவகையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இல்லங்கள் வழங்கப்பட வேண்டும் என எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகள் தொடர்பான சட்டத்திலும், அவர்களுக்கு பொருத்தமான இல்லமொன்று வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, விசாலமான அல்லது நவீன வசதிகொண்ட வீடு வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை.

தேவையேற்படின் இது தொடர்பில் நாமல் ராஜபக்ஷ போன்ற சட்டத்தரணிகளை கொண்டு ஆராய முடியும். முன்னாள் ஜனாதிபதிகளுக்கான இல்லம் என்பது அரசமைப்பினால் வழங்கப்பட்டதொரு வரப்பிரசாதம் அல்ல.” – என்றார்.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை இரவு நேரத்தில் விசேட சோதனை



கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் அரிசியை பதுக்கி வைத்திருக்கும் வர்த்தகர்களை கண்டறிவதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை இரவு நேரத்திலும் விசேட சோதனைகளை முன்னெடுத்துவருகிறது.

கடந்த சில நாள்களில் நூற்றுக்கும் அதிகமான அரிசி தொடர்பான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அந்த அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இரவு நேரங்களில் சோதனைகள் நடத்தப்படாததால், பல வர்த்தக நிலையங்கள் மாலை மற்றும் இரவு வேளைகளில் அதிக விலைக்கு சிவப்பு அரிசியை விற்பனை செய்வதாக விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன அண்மையில் கருத்து வெளியிட்டார்.

அதன்படி, நேற்று முன்தினம் இரவு ரத்மலானை பகுதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

# கல்கிசை துப்பாக்கிச்சூடு; 5 சந்தேகநபர்கள் கைது

கல்கிசை சிறிபால மாவத்தையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரியும் அவர்களில் உள்ளடங்குகிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் முன்னாள் இராணுவ உறுப்பினரென பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

கல்கிசையில் கடந்த 19ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த விடயத்தை ஒட்டி ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. அதில் யோஷித சேர்க்கப்பட்டிருக்கின்றார். அந்தப் பின்புலத்திலேயே இப்போது யோஷிதவுக்கு எதிராக சி.ஐ.டி. பாய்ந்திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை விலக்கிய விடயம், அவர் உயர்நீதிமன்றத்தை நாடியுள்ள பின்னணியில், ஆட்சித் தலைமைக்கு நெருக்கடி தருவதாக அமையக்கூடும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமான விவகாரம் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புத் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை உரிய பாதுகாப்புத் தரத்தில் பெற்றுக் கொண்ட ஆவணங்கள் அரசு தரப்பால் சமர்ப்பிக்கப்பட வேண்டி இருக்கும். அவை உரிய முறையில் செய்யப்பட்டனவா என்ற சந்தேகம் நிலவுகின்றது. இந்தப் பின்புலத்தில் மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்திடம் சென்றிருக்கின்றமை அரசை நெருக்கடிக்குள் தள்ளியிருக்கும் எனக் கருதப்படுகின்றது.

அந்த எரிச்சலின் விளைவே மற்றொரு ராஜபக்ஷ மீதான பாய்ச்சல் என்று சில தரப்புகள் கூறுகின்றன. முன்னைய அரசுகளையும், அரசு தலைமைகளையும், அரசை நிர்வகித்தவர்களையும் மோசமாக விமர்சித்து, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி, அந்த முன்னைய அதிகாரத் தரப்பினருக்கு எதிராக இதுவரை எதுவித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற எரிச்சல் மக்களுக்கு அதிகரித்து வருகின்றது. அது பற்றிய அறிக்கைகள் அரசு தலைமைக்குக் கிடைத்த பின்புலத்தில் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

வரப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர், முன்பு தாம் தாறுமாறாக விமர்சித்த தரப்புகள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்து செயலில் காட்ட வேண்டிய கட்டாயம் ஆட்சி தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

அந்தப் பின்புலத்திலேயே இந்தக் கைது என்றும் சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஏதேனும் கைது நடவடிக்கைகள், சட்ட செயற்பாடுகள் காத்திரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று காட்ட வேண்டும் என்ற அவசரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே யோஷித கைது தோன்றுகின்றது.

ஆனால், தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில்வலுவானஆதாரங்கள்,வெளிப்படையாக மக்களுக்குத் தெரியப்படுத்தக்கூடிய தகவல்கள் இல்லாமல் இத்தகைய கைதுகள் முன்னெடுக்கப்படுமானால் அவை ராஜபக்ஷக்களுக்குச் சாதகமான உணர்வலைகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடும் என்பதை அரசுத் தரப்பு ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

---

## யோஷிதவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷவை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யோஷிதவைக் கொழும்பு, புதுக்கடை, இலக்கம் 5 மேலதிக நீதிவான் பவித்ரா சஞ்சீவனி முன்னிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மாலை ஆஜர்படுத்தியபோது அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டவிரோதமாகச் சொத்து குவித்த விவகாரம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 3 கோடி 40 இலட்சம் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியமை தொடர்பில் இடம்பெற்ற மோசடியில் யோஷித ராஜபக்ஷவைச் சந்தேகநபராகப் பெயரிடப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சட்டமா அதிபர் அறிவுறுத்தியமையை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

---

## அநுர அரசுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை யாழ்.கல்வியங்காட்டில்உள்ளஅவரதுஅலுவலகத்தில் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நானே சிவஞானம் அண்ணனிடம் சந்திப்புக்கு நேரம் கேட்டிருந்தேன். அதற்குக் காரணம் ஏற்கனவே பல தடவைகள் கூறியிருக்கின்றேன்.

நாடாளுமன்றத்தில் 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்றார்கள்.

எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லை. அப்படிப்பட்ட நிலையில் அரசு தமக்குத்தான் பெரும்பான்மை இருப்பதாகவும், மக்கள் தங்களுக்கு ஆணையை வழங்கியுள்ளதாகவும் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கித் திட்டமிட்டக் கருத்துருவாக்கத்தைச் செய்கின்றனர்.

யதார்த்தம் அப்படியல்ல. மாறாக இம்முறை தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கட்சிகளுக்கு அமோக ஆணையை வழங்கி இருக்கின்றார்கள்.

அரசு கொண்டுவர யோசிக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் முதற்-கட்டமாக எதிர்ப்பதற்கு எங்களுக்கிடையில் அறுதிப் பெரும்பான்மையைக் காட்டவேண்டும்.

தமிழரசுக் கட்சிக்கு எட்டு ஆசனங்கள் இருக்கின்றன. 19 பேர் என்றால் இன்னும் இரண்டாக அதிகரித்தால் மட்டுமே அறுதிப் பெரும்பான்மையை உறுதிப்படுத்தலாம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒன்று, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒன்று என அந்த மூன்று தரப்புகளும் ஒரு புள்ளியில் சந்தித்தால் அறுதிப் பெரும்பான்மையாகக் காட்டலாம்.

தமிழ் மக்களுடைய ஆணை பெற்ற தரப்புகள் எப்படி நாங்கள் எங்கள் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஒரு புள்ளி சந்திக்கின்றது என்ற வகையில் பேசுகின்றோம். அந்தக் கோணத்தில் மூன்று தரப்புகளும் ஒன்றாக சேர வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு யோசனை இருந்தது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த கையோடு தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவி சம்பந்தமாகக் கேள்வி வந்தது. நாடாளுமன்றக் குழு அந்தக் கட்சியால் நியமிக்கப்பட்ட வகையில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்ற வகையில் சிறீதரனோடு தொடர்பு கொண்டேன்.

ஆனால், அந்த அமைப்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைமைப் பதவியில் உள்ள சிவஞானம் அண்ணைக்கும், செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கத்துக்கும் வழங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இடத்தில் சிவஞானம் அண்ணன் ஒரு பேட்டியில், உத்தியோகபூர்வமாக தலைவர் அல்லது செயலாளருக்கு அழைப்பிதழ் வரவில்லை. அழைப்பு வந்தால் பரிசீலிக்கத் தயார் என்று சொல்லப்பட்ட இடத்தில் நாங்கள் அவருடன் நேரத்தைக் கேட்டு இன்று இந்த விடயத்தை அவரிடம் பகிர்ந்து இருக்கின்றோம்.

தங்கள் கட்சியிடம் விடயத்தைப் பேசி அடுத்த கட்டமாக ஒரு முடிவை அறிவிப்பதாகச் சிவஞானம் அண்ணன் சொல்லி இருக்கின்றார். நாங்கள் அந்தச் சந்திப்பை விரைவாக மேற்கொள்கின்ற அவசியத்தை அவருக்கு தெளிவுபடுத்தி இருக்கின்றோம். அந்தவகையிலான எதிர்பார்ப்புடன் தமிழரசுக் கட்சி நல்ல முடிவை அறிவிக்கும் என்று எதிர்பார்ப்பில் இருக்கின்றோம்.

அரசினுடைய போக்கை நாடாளுமன்றத்தில் நடந்து கொள்கின்ற விதத்தைப் பார்க்கும்போது தெரிந்துகொள்ள முடிகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வைத்துக்கொண்டு ஒருதலைப்பட்சமாகவே நடந்து கொள்ளுகின்றார்கள்.

எண்ணிக்கையை வைத்துக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கும்போது நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மீறி சில விடயங்களை அரச தரப்பினர் செய்கின்றார்கள்.

தமிழ் அரசியல் தலைவர்கள் என்ற வகையில் மக்களை வழிநடத்தும் பொறுப்பு எங்களிடம் இருக்கின்றது. அதில் நாங்கள் தவறக்கூடாது.

அந்த அடிப்படையில் அவசரமாக எங்களிடத்திலேயே நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் காட்டி தவறான விடயத்தைத் தடுப்பதற்கான ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.” – என்றார்.

---

## நல்லாட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மற்றும் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோருடனான நேற்றைய சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும், சிவஞானம் சிறீதரன் எம்.பியும் நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இது தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவில் பேசியிருக்கின்றோம்.

அவர்களுடைய முன் முயற்சிக்கு விரோதமாகவோ, எதிராகவோ, மாறாகவோ ஒரு நிலைப்பாட்டை நாங்கள் எடுக்கவில்லை. அரசமைப்பு

06

# மரண அறிவித்தல்



மலர்வு
28.02.1967

உதிர்வு
25.01.2025

## பொன்னுத்துரை ரவிச்சந்திரநேசன்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, பதிவுகாரர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ரவிச்சந்திர நேசன் யாழ்ப்பாணத்தில் நேற்று (25.01.2025) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கமாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கெங்காதேவியின் அன்புக் கணவரும், நிதர்சன் (கனடா), நிவேதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரைச்செல்வி (இலண்டன்), ஐங்கரநேசன் (யாழ்ப்பாணம்), ஆறுமுகநேசன் (இலண்டன்), பத்மினி அனுசூயை (கனடா), ஸ்ரீதத்தாத்திரேயநேசன் (யாழ்ப் பாணம்), திருக்கேதீச்சரநேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (26.01. 2025) ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடி பதிவுகாரர் ஒழுங்கையில் உள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை வைக்கப்பட்டு, அதன்பின்னர் இறுதிக் கிரியைகளின் பொருட்டு கனடாவுக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

**தகவல்:**
**பொ.ஐங்கரநேசன் - 077 5565 460**
**பொ.ஸ்ரீதத்தாத்திரேயநேசன் - 077 276 0493**

## நல்லாட்சியில்...

(5ஆம் தொடர்ச்சி...)

தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கு ஏழு பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளோம்.

இந்நிலையில், புதிய அரசமைப்பு மற்றும் இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பான கலந்துரையாடலுக்குக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது கட்சி ஊடாக அழைப்புக் கடிதத்தை உத்தியோகபூர்வமாகத் தந்திருக்கின்றார். நாளை (இன்று) தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கத்தை நேரில் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அவரிடமும் இந்தக் கடிதத்தைக் கையளித்து ஏனையவர்களுடன் பேசி முடிவைத் தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கின்றேன்.

கஜேந்திரகுமாரின் அழைப்புக் கடிதம் தொடர்பில் சாதகமாக ஏனைய ஆறு பேருடன் கலந்துரையாடி தேவைப்பட்டால் அரசியல் குழுவிலும் கலந்துரையாடி மேல் நடவடிக்கை எடுப்போம். இதனை ஒரு சாதகமானநகர்வாகநான்பார்க்கின்றேன்.

மேலும் ஒரு விடயத்தைச் சொல்லியிருக்கின்றேன். அதாவது 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையில் (நல்லாட்சி காலத்தில்) வரையப்பட்ட புதிய அரசமைப்பு வரைவு பற்றி நாங்கள் பேச வேண்டிய தேவை இல்லை. அது ஏற்கனவே கைவிடப்பட்டாயிற்று.

ஆனபடியால் 2021 இல் (கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில்) விசேட நிபுணர் குழுவுக்குச் சமர்ப்பித்த ஒரு முன்மொழிவு இருக்கின்றது. அதையும் சேர்த்து கஜேந்திரகுமாருடைய கருத்துக்களோடு பகிர்ந்து நாங்கள் சுமுகமான ஒரு முடிவுக்கு வரக் கூடியதாக இருக்கும். அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் எங்களது மத்திய செயற்குழுவிலும் ஒரு முடிவாக இருந்தது.

அந்தவகையில் இந்த விடயங்களைக் கையாளுகின்ற எமது கட்சியின் குழுவினருடன் கலந்து பேசி மேல் நடவடிக்கையை எடுப்போம். இது ஒரு சாதகமான நகர்வாகவே நான் பார்க்கின்றேன்."
– என்றார்.

# சீரற்ற காலநிலையால் 92,471 பேர் பாதிப்பு




நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 27,751 குடும்பங்களைச் சேர்ந்த 92,471 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 320 வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன என அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், நாட்டில் உள்ள 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 48 நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி நிதியத்தின் பிரதேச மட்ட சேவைகள் 7 ஆம் திகதி முதல் ஆரம்பம்




ஜனாதிபதி நிதியத்தின் பிரதேச மட்டத்திலான சேவைகள் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது

மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் அலரி மாளிகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதி நிதிய அலுவலகத்தின் சேவைகளை நாடளாவிய ரீதியில் உள்ள 361 பிரதேச செயலக அலுவலகங்களிலும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்து பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டு இது தொடர்பில் முன்னோடித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் இந்த திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியம் தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கும் வகையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இணையம் மூலமான கலந்துரையாடலின் போதே இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தரவுப் பிழை!

நாட்டில் அத்தியாவசிய பொருள்களுக்கு திடீர் திடீரென தட்டுப்பாடு - பற்றாக்குறை - ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அவற்றில் பிரதானமானது, முறையான திட்டமிடல் தயாரிப்பு அல்லது முன்னேற்பாடு இல்லை என்பதுதான்.

தேசிய ரீதியில் திட்டமிடலை கனகச்சிதமாக முன்னெடுப்பதற்கு பிரதானமாக அவசியமானது தரவுகள். சம்பந்தப்பட்ட விடயம் பற்றிய தகவல்கள், புள்ளி விவரங்கள் சரியாக இருந்தால் மட்டுமே திட்டமிடலும் பெறுபேறும் வெற்றிகரமாக அமையும். இல்லையேல் கோவிந்தாதான்.

இப்போதுநாட்டில்அரிசி, தேங்காய், உப்பு போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அதிலும் பிரதான விடயமாக இருப்பது அரிசி.

இப்படி அரிசித் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு புதிய அரசு நெருக்கடிக்குள் சிக்கி இருக்கின்றது என்றால் அதற்கான காரணங்களில் ஒன்று சரியான திட்டமிடல் இல்லை என்பது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான அவசர திட்டத்தை கூட வகுப்பதற்கு இயலாமல் அரசு தள்ளாடுகிறது. தகுந்த புள்ளி விவரங்கள் - உண்மையான தகவல்கள் - சரியான தரவுகள் - இல்லாமல் திட்டமிடலை நேர்த்தியாகச் செய்ய முடியாமல், அரசு தள்ளாடுகின்றது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா குறிப்பிடுகிறார்.

அரிசித் தட்டுப்பாடு குறித்து நாடாளுமன்றத்தின் பொது நிதிக் குழு கடந்த புதன்கிழமை விவசாய அமைச்சின் அதிகாரிகளோடு கூடி ஆராய்ந்தது. அங்கு பிரசன்னமாக இருந்த விவசாய அமைச்சின் மூத்த அதிகாரிகளுக்கு நாட்டில்கடந்த ஆண்டில் உற்பத்தியான அரிசியின் அளவு தொடர்பில் சரியான புள்ளி விவரங்கள் தெரிந்திருக்கவில்லை என்று ஹர்ஷ டி சில்வா சுட்டிக் காட்டுகிறார்.

கடந்த ஆண்டு விளைந்த நெல்லின் அளவு, இந்த ஆண்டு எதிர்பார்க்கும் விளைச்சல் ஆகியவை பற்றிய தரவுகளின் அடிப்படையிலேயே இறக்குமதிக்கான விதிமுறைகளை வகுக்க முடியும். ஆனால் அதற்கான புள்ளி விவரங்கள், தரவுகள் அதிகாரிகளிடம் சரியாக - முறையாக - இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

"அதிகாரிகளின் கூற்றுப்படி 2024 பெரும் போகத்தில் மட்டும் 4.39 மில்லியன் தொன் நெல் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால் நான் அதை மறுத்தேன். சற்று ஏழைத்தாழ 2 மில்லியன் தொன்களுக்கு அதிகமான தொகை நெல்லே உற்பத்தியாகி இருக்கும்" என்கின்றார் அவர்.

பின்னர் அந்தத் தொகை முழுமையாக 2024 ஆம் ஆண்டின் சிறுபோகம், பெரும் போகம் ஆகிய இரண்டினதும் உற்பத்தி என்று கூறப்பட்டது

ஆயினும் கூட, கடந்த வருடம் முழுமையாக அப்படி 4.39 மில்லியன் தொன் நெல் நாட்டில் உற்பத்தி செய்யப்படவில்லை என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசங்கவே ஒப்புக்கொண்டுள்ளார்.

இப்படிச் சரியான தகவல்கள், தரவுகள்இல்லாமல்தேசியரீதியில்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான திட்டமிடலை முன்னெடுத்தால் கடைசியில் நாடு துந்தணாதான் பாட வேண்டியிருக்கும். இது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

மக்கள் வயிறு பசியில் வாட வேண்டியதுதான்.

# தேர்தல் வழக்குகளுக்காக தனியான நீதிமன்ற கட்டமைப்பு வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை



தேர்தல் தொடர்பான வழக்குகளுக்காக தனியான நீதிமன்ற கட்டமைப்பை கோரியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவிக்கிறார்.

வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை இதன்மூலம் இலகுபடுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை என அவர் கூறினார்.

தொழில் திணைக்களம், வனப்பாதுகாப்பு திணைக்களம் போன்றவற்றுக்கு இருப்பதைப் போல தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் வழக்குத் தாக்க செய்யும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க வலியுறுத்தினார்.

தேர்தலொன்றின் போது இழைக்கப்படும் குற்றம் தொடர்பாக அடுத்த தேர்தலுக்கு முன்னரேனும் தண்டனை வழங்கப்படாத பட்சத்தில் மக்கள் நம்பிக்கை இழப்பர் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக தொழில் நீதிமன்றத்தைப் போன்று நீதிமன்ற கட்டமைப்பிற்குள் தேர்தல் வழக்குகளை கையாள்வதற்கான பிரத்தியேக இடம் வழங்கப்படுமாயின் சிக்கல்களை தீர்க்க முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் கோட்டத்தில் முதலிடம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டம் உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் 170 புள்ளிகளைப் பெற்று வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு கடந்த 23ஆம் திகதி மாலை வெளியாகியது.

அதன் அடிப்படையில் செல்வசேகரன் சத்யஜித் 170 புள்ளிகளைப் பெற்று கோட்ட ரீதியில் சாதனை புரிந்துள்ளார்.

மேற்படி பாடசாலையின் மாணவர்கள் கோட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்றுள்ளனர்.



# அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிராக குற்றப்பத்திரிகை



அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

சில சர்சைக்குரிய சம்பவங்களுடன் குறித்த அரசியல்வாதிகள் தொடர்புப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்வது தொடர்பான காரணிகள் ஆராயப்படுகின்றன என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சில குறைபாடுகள் காணப்படுவதால் அந்த விசாரணைகளை மீண்டும் முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும்




**தொழுநோய் தினம் என்றால் என்ன?**

உலக தொழுநோய் தினம், ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தின் வரும் கடைசி ஞாயிற்றுக் கிழமை அனுசரிக்கப்பட்டு, அதனை தொடரும் வாரங்களில் நினைவு கூறப் படுகின்றது.

இது தொழுநோய் மற்றும் அது சார்நத களங்கத்துக்கு எதிரான தற்போதைய போராட்டத்தின் உலகளாவிய நினைவூட்டலாகச் செயல்படுகிறது. இந்த முக்கியமான நாள் தொழுநோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப்படுத்துவதையும், பாகுபாட்டைக் குறைப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக தொழுநோய் தினமானது, புரிந்துணர்வை வளர்ப்பதன் மூலம், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் சமூகப் புறக்கணிப்பை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு முக்கிய பங்காக இருப்பதோடு எவரும் அவர்களின் நோயால் புறக்கணிக்கப்படாத எதிர்காலத்தை நோக்கி உழைக்கின்றது.

**தொழுநோய் என்றால் என்ன?**

தொழுநோய் என்பது ஒரு நாள்பட்ட தொற்று நோயாகும். இது முதன்மையாக தோல், நரம்புகள் மற்றும் சில வேளைகளில் சீதமென்சவ்வுகளையும் பாதிக்கின்றது. இலங்கையில், இந்த நோய் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க அளவில் பரவி வருகின்றது. ஆயிரக் கணக்கான நபர்கள் அதன் பாதிப்புடன் வாழ்கின்றனர். நவீன காலத்தில் பன்மருந்து முறை (எம்.டி.ரி.) மூலம் தொழுநோய் முழுமையாக குணப்படுத்தக் கூடியதாகவும் சிகிச்சை அளிக்கக் கூடியதாகவும், இருந்தாலும், பாதிக்கப்பட்ட தனிநபர்கள் இன்னும் கடுமையான சமூக இழிவு மற்றும் பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர். இந்த பிழையான எண்ணக் கருத்துக்கள் பெரும்பாலும் அவர்களின் வேலை செய்யும் திறன், குடும்பம் மற்றும் சமூக உறவுகள் மற்றும் சமூகத்தில் நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கான ஒட்டுமொத்த திறனையும் பாதிக்கின்றது.

ஆழமாக வேரூன்றிய சமூகப் பிழையான எண்ணக் கருத்துக்கள் நோயின் உடல் ரீதியான சவால்களைக் கூட்டுவது மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட நபர்களை சமூகத்தின் நிழலில் வைத்து ஏற்றுக் கொள்வதற்கும், அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் போராடுகின்றது.

இதன் விளைவாக, தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றார்கள். தனிநபர்கள் தொழுநோயைச் சுற்றியுள்ள களங்கம், சமூகப் புறக்கணிப்பு மற்றும் பாகுபாடுகளுக்கு அஞ்சுவதால், ஆரம்பகால பரிசோதனை மற்றும் சிகிச்சையைத் தேடுவதைத் தடுக்கின்றது. நோயுடன் தொடர்புடைய அவமானத்தினால் சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்படுவோம் என்று நினைத்து, சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லவோ அல்லது மருத்துவர்களை அணுகவோ தயங்குகிறார்கள். இதன் விளைவாக, தாமதமான நோயறிதல் மற்றும் சிகிச்சையானது மென்மேலும் நோய் பரவுவதற்கு வழிவகுப்பதோடு, நிரந்தர அங்கவீன அபாயத்தையும் அதிகரிக்கின்றது. தொழுநோயுடன் வாழ்பவர்களை ஏற்றுக்கொள்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் உள்ள தடைகளைக் கடப்பதில் அதிக விழிப்புணர்வு மற்றும் புரிந்துணர்வு அவசரத் தேவையை இந்த தற்போதைய சமூக விலக்கு எடுத்துக்காட்டுகிறது.

**ஐக்கிய அபிவிருத்தி நிதியம்**

ஐக்கிய அபிவிருத்தி நிதியம் என்பது இலங்கை முழுவதும் உள்ள விளிம்பு நிலை சமூகங்களை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். 2005 இல் நிறுவப்பட்ட ஐக்கிய அபிவிருத்தி நிதியம், வறுமை, நோய், இயற்கை பேரழிவுகள் போன்றவற்றால் பாதிக்ப்பட்டவர்கள் மற்றும் சமூக அநீதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் தேவைகளை நிவர்த்தி செய்ய அயராது உழைக்கின்றது.

> **“தொழுநோயை குணப்படுத்துவது சாத்தியமானாலும் அதின் களங்கத்தை போக்குவது ஒரு அமைதியான போராக உள்ளது”.**

ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் நோக்கம், சமூக அமைதி, பொது நீதி மற்றும் பொருளாதாரத் திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஆற்றல்மிக்க செயல்களின் மூலம் சமூகங்களை ஒன்றிணைத்து அதிகாரம் அளிப்பதாகும். அவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட பாதிக்கப்படக் கூடிய சமூகங்களை அணுகி அவர்களின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்த உதவுகிறார்கள்.

தொழுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக வாதிடுவதிலும் ஐக்கிய அபிவிருத்தி நிதியம் முக்கியப் பங்காற்றியுள்ளது.

இந்தக் குழுவின் நோக்கமானது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வீட்டுக்கு வீடு ஆய்வுகள் மற்றும் திரையிடல்கள், வெளிப்புற பங்குதாரர்களுக்கான பயிற்சி, தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான சுய கவனிப்பு, மற்றும் கூட்டங்களைத் திட்டமிடுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் மூலம் தொழுநோய் குறித்ததான களங்கத்தை குறைத்து சமூக விழிப்புணர்வை மேம்படுத்துவதாகும்.

சமூகப் பாகுபாட்டைக் குறைப்பதற்கான வளங்களைச் சேர்ப்பதன் மூலமும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், ஆரோக்கியமான, நிறைவான வாழ்க்கையை நடத்துவதற்கும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்கும் ஐக்கிய அபிவிருத்தி நிதியம் உதவுகிறது.

**தொழுநோயாளர்களுக்கான சட்டம்**

இலங்கையில் தொழுநோயாளிகளுக்கான சட்டம்

தொடர்ச்சி▼

# தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும்

தொடர்ச்சி▲

தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களை சட்டரீதியாகப் பிரித்து வாழ்வின் பல்வேறு அம்சங்களில் அவர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவர்களை பாகுபாடு காட்டுவதற்கு தொடர்ந்து பங்களிக்கிறது.

தொழுநோய் குணப்படுத்தக் கூடியதாக இருந்தாலும், இந்த தொன்மையான சட்டம் தீங்கிழைக்கும் ஒரே மாதிரியான மற்றும் சமூக ஒதுக்கீட்டை நிலை நிறுத்துகிறது.பெரும்பாலும் தனிநபர்களிடையே பாகுபாடு மற்றும் சுய-இழிவுகளுக்கு பங்களிக்கிறது.

2025 ஆம் ஆண்டு உலக தொழுநோய் தினத்தின் முக்கிய செய்தியாக, தொழுநோயாளிகள் கட்டளைச் சட்டத்தை ரத்து செய்யுமாறு இலங்கை அரசை ஐக்கிய அபிவிருத்தி நிதியம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

அவ்வாறு செய்வதன் மூலம், ஐக்கிய அபிவிருத்தி நிதியமானது பாகுபாட்டுக்கான சட்ட அடிப்படையை அகற்றி, தொழுநோயால் பாதிக்கப்பட்ட தனி நபர்கள் கண்ணியத்துடனும் சமத்துவத்துடனும் வாழக் கூடிய ஒரு உள்ளடக்கிய சமுதாயத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2025 உலக தொழுநோய் தினத்துக்கான கருப்பொருளைப் பின்பற்றி ஒன்றுபடுவோம் செயற்படுவோம் இல்லாதொழிப்போம் என்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் ஒற்றுமையாக நிற்குமாறு பொது மக்களை ஐக்கிய அபிவிருத்தி நிதியம் அழைக்கிறது.

பழமை வாய்ந்த தவறான எண்ணங்களுக்கு அப்பால் செல்லவும், நடந்து வரும் களங்கம் மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான புரிதல், பட்சபாதம் மற்றும் ஆதரவை வழங்குமாறு அனைவரையும் வலியுறுத்துகிறது.

ஏற்றுக்கொள்ளும் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவதை உறுதிசெய்யவும், சமூகத்தின் முழு உறுப்பினர்களாக அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ வாய்ப்பளிக்கவும் உதவலாம்.

ஒன்றாக, யாரும் தவறான கருத்துக்கள் பின்பற்றாத ஒரு உலகத்தை உருவாக்குவதற்கு மாறாக, அவர்களின் மனிதநேயத்துக்காகக் கொண்டாடுவோம்.

# நல்லூர் இளங்கலைஞர் மன்ற புதிய கட்டட திறப்பு விழா இரண்டாம் நாள் நிகழ்வு இன்று

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன் அதன் புதிய கட்டடத்தைப் புனரமைத்து நேற்று (25) காலை திறந்து வைத்துள்ளது.

அந்தப் புதிய கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று (26) இடம்பெறவுள்ளன.

நிகழ்வுகள் காலை 9 மணிக்கு நல்லூரில் இளங்கலைஞர் மன்றத்தின் கலா மண்டபத்தில் மன்றத்தின் நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகளில் சிறப்பு அதிதிகளாக நாதஸ்வரக் கலாநிதி வி.கே. பஞ்சமூர்த்தி, ஓய்வு பெற்ற நடன வரிவுரையாளர் கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன், கொண்டலடி வைரவர் ஆலயத் தலைவர் இ.வசிகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

திருநெல்வேலி அனுராகம் கவின் கலை நிலைய ஆசிரியர் விஜயபாரதி வெங்கடேஸ்வரனின் நெறியாள்கையில் வீணா வர்ஷனம் இடம்பெறும்.

தொடர்ந்து இசையரங்கு இடம்பெறும். பாட்டு - ஜெகன் மதுஷிகன், வயலின் - இ. நிரோஜன், மிருதங்கம் - ஞா. வசந், கடம் - அ. சண்முகப்பிரியன்.

இதனையடுத்து ஈழத்தில் இன்று முத்தமிழ் வளர்ச்சியடைந்துள்ளது- அடையவில்லை என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இன்று மாலை நிகழ்வுகள் 4 மணியளவில் ஆரம்பமாகும். நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக நல்லூர் முன்னாள் பிரதேச செயலர் திருமதி அன்ரன் எழிலரசி, நல்லூர் சாரங்கா இசை மன்ற இயக்குநர் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன், கனடா நியூ ரங்கனாஸ் நகைமாட உரிமையாளர் ரங்கநாதன் பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தொடர்ந்து திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் நெறியாழ்கையில் இந்தியன் கோணர் இசைப்பிரிவு மாணவர்களின் குழு இசை இடம்பெறும்.

தொடர்ந்து வைஷாலி யோகராஜனின் பாட்டு இடம்பெறும். வயலின் - இ. நிரோஜன், மிருதங்கம், இ. சண்முகப்பிரியன், கெஞ்சிரா - ம. சுலக்ஷன்.

இதனையடுத்து இந்தியாவைச் சேர்ந்த இசைப் பேரொளி சந்தீப் நாராணணனின் பாட்டு இடம்பெறும். வயலின் - எஸ். வரதராஜன், மிருதங்கம் - நெய்வேலி பி. வெங்கடேஸ், கெஞ்சிரா - அ. அத்றியா.

இறுதியில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் ஏற்பாட்டில் சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை மாலை இடம்பெறும்.

# "பயணிக்கின்றன பாதைகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா!

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எஸ்.லதிஸ்கா (ஆரணி) எழுதிய "பயணிக்கின்றன பாதைகள்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் (29) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளருமான இ.த ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு இயக்குனர் சுவாமி தோட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை செ.யூட் அமிலதாஸ் அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக மூத்த கலைஞர் கலாபூசணம் செல்லையா சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேசசெயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.திருமாறன், துளிர் சேவை அமைப்புத் தலைவர் எம்.பி தீபன், தேசிய சிறுவர் சம்மேளன தலைவர் மரியசீலன் எலக்ஸ்ரின்ராஜ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் திருமதி மாலாதேவி மதிவதனனும் ஆய்வுரையை உடுப்புக்குளம் தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் முல்லை இலக்கியச்சுடர் பாரதி மைந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதல் பிரதியை இயக்கச்சியைச் சேர்ந்த கலைஞரும் சமூக செயற்பாட்டாளரும் கொற்றாண்டார் குளம் பத்திரகாளியம்மன் ஆலயத் தலைவருமாகிய பொ. மகாலிங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

**'தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே' என்ற தலைப்பில் 'தமிழ் அரசியல் ஆளுமைகளுக்கு அன்பான வேண்டுகோள்' ஒன்றை இலங்கை வாழ்தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பின் சார்பாக அதன் சர்வதேச இணைப்பாளர் ராஜ் சிவநாதன் வெளியிட்டுள்ளார்.**

**இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளுக்கான இந்த அழைப்பின் முதல் பகுதி நேற்று பிரசுரமாகி இருந்தது. எஞ்சிய பகுதி இன்று பிரசுரமாகுகின்றது.**



**- ராஜ் சிவநாதன் -**
*(சர்வதேச இணைப்பாளர் -இலங்கை வாழ்தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு)*

**(நேற்றைய தொடர்ச்சி)**

### தீர்வுக்கான வழிமுறைகள்
### நலனுக்கு முன்னுரிமை

சுயநல அரசியல் தலைவர்கள் செய்ய வேண்டிய மாற்றங்கள் இவைதான்:

1. சுயநலத்தை விட்டு மக்கள் நலனை முன்னிலைப் படுத்துதல்:
   - தங்களின் தனிப்பட்ட இலட்சியங்களை துறந்து, மக்கள் பிரச்சினைகளுக்கே பிரதான கவனம் செலுத்த வேண்டும்.
   - ஒருமித்த இலக்குகளை தகுதி வாய்ந்த பிரதி நிதிகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.
2. ஒருமைப்பாடு மற்றும் விட்டுக்கொடுக்கல்:
   - தமிழர் இடையே உள்ள கருத்து வேறுபாடுகளை மாற்ற, அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே கூரையின் கீழ் செயல்பட வேண்டும்.
   - பொது நலனுக்காக ஒற்றுமையாக செயல்படுவது மட்டுமே சமஷ்டி அரசியலுக்கான முன்னோடி அடிப்படையாக இருக்கும்.
3. மக்களுடன் நேரடி தொடர்பு:
   - பொதுமக்களின் உண்மையான பிரச்சினைகளை கேட்டு, அவற்றுக்கு உடனடி தீர்வுகள் கொடுக்க அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
   - பொதுமக்கள் நலனுக்காக ஒவ்வொரு விவகாரத்திலும் உடனடி நடவடிக்கை தேவை. மக்கவின் நலன் சுயநலத்தை வெல்லும் போது மட்டுமே கிட்டும்.



சுயநல அரசியலால் மக்கள் நலன் பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆகையால், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், அவர்களின் எதிர்காலத்துக்காகவும், அரசியல் தலைவர்கள் தங்கள் சுயநலத்தைக் கைவிட்டு ஒற்றுமையாக செயல்பட வேண்டும்.

'மக்கள் நலனே தலைமைமையம்' என்ற தத்துவத்தைபின்பற்றி,தங்களின்செயல்களிலும்கொள்கைகளிலும் மாற்றம் கொண்டால் மட்டுமே தமிழ் மக்கள் எதிர்காலம் பாதுகாக்கப்படும்.

சுயநலத்தைத துறந்தால் சமரசமும், சமாதானமும் வரும்.

மக்களின்நலனுக்காகஒருமைப்பாட்டின்அவசியம் கருதி இணக்கத்துக்கும் போராட்டத்துக்கும் நடுவிலான சமநிலையை நிறுவுவோம்.

தமிழ் மக்களின் நலனுக்கு இடையூறாக இருக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று அரசுடன்

தொடர்ச்சி▼

# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

தொடர்ச்சி▲

இணக்கமாகச் செயல்படுவோருக்கும் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக போராடுபவர்களுக்கும் இடையிலான கருத்து மோதல் ஆகும். ஒருபக்கம், தமிழர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ள அரசுடன் இணைந்துசெயல்படுவோரின் நோக்கம். மறுபக்கம், நீண்டகால அரசியல் தீர்வுகளுக்காக அழுத்தம் கொடுக்கும் அரசியல் போராளர்களின் குரல். இவ்விரண்டு அணிகளும் தமிழ் மக்களின் நலனுக்காகவே செயல்படும் நிலைமை உருவாக்க முடியுமானால், தமிழ் சமூகத்தின்

எதிர்காலம் நிச்சயமாக நன்மை பயக்கும். எனவே, இடையே ஒரு புரிந்துணர்வை உருவாக்குவது மிக முக்கியம்.

### அரசுடன் இணக்கமாக செயல்படுவோரின் நோக்கம்

அரசுடன் இணக்கமாக செயல்படுபவர்கள் தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டிய நெருக்கடியை உணர்கிறார்கள்.

- அரசியல் சிக்கல்களை தவிர்த்து மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தல்.
- மக்களுக்கு மின்சாரம், குடிதண்ணீர், வேலை வாய்ப்புகள், வீடு போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவது அவசரத் தேவையாக இருக்கிறது.
- அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது என்ற நிலைமையைத் தவிர்க்கப் போராடுகிறார்கள்.

### உடனடி நடவடிக்கைகள்

- மத்திய அரசுடன் ஒத்துழைப்பு செய்வதன் மூலம் நிதி உதவிகளை பெற்றுக்கொள்வது.
- தமிழ் மக்களின் தினசரி பிரச்சினைகளுக்கு தீர்வை உடனடியாக வழங்குவது.

### அரசியல் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களின் நோக்கம்

தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகளைக் கொண்டு வர, அரசியல் உரிமைகள் மற்றும் சுயாட்சி ஆகியவை முக்கியமானவை என்பதை வலியுறுத்துபவர்களின் நோக்கம் தற்காலிக தேவைகளுக்கு மேல் உயர்ந்ததே.

- அரசியல் உரிமைகளின் அவசியம்.
- சமஷ்டி அரசமைப்பு, நில உரிமைகள், மொழி உரிமைகள் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்க அரசியல் அழுத்தத்தை தொடர வேண்டும்.
- தமிழ் மக்களின் அடையாளத்தை பாதுகாக்க நீண்டகால அரசியல் தீர்வுகள் தேவை.
- அரசின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்றல்.
- மத்திய அரசின் நீண்டகால தமிழ் எதிர்ப்பு நடவடிக்கைகளைப் புறக்கணிக்க முடியாது.
- அரசன் அழுத்தத்திற்குள் செயல்படுவதால் போராட்டப் பகுதி பலவீனமடையும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

3. கருத்து விளைவுகள் மோதலுக்கு - முரண்பாடுகளுக்கு வழிவகுக்கின்றன.

இரு அணிகளும் ஒருவருக்கொருவர் தங்களை எதிர்ப்பவர்களாகவே கருதுகின்றனர். இதனால், தமிழர் சமூகத்தில் உள்ள குழப்பம் மேலும் அதிகரிக்கிறது.

- பிளவுகள்.
- அரசுடன் இணங்குபவர்கள் தமக்கு வாய்ப்பளிக்கப்பட்ட வாய்ப்புகளை தமிழ் மக்களுக்கு பொதுவாகப் பயன்படுத்தாமல், தங்கள் நலனுக்காகச் செயல்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள்.
- அரசியல் உரிமைகளுக்காக போராடுபவர்கள் மக்களின் உடனடி தேவைகளை புறக்கணிக்கிறார்கள் என்ற விமர்சனங்கள்.

### இணக்கமின்மை

- இரு அணிகளும் ஒருமித்து செயல்படத் தவறுவதால், மக்கள் நலனுக்கான முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் தடைகள் ஏற்படுகின்றன.
- தமிழர் மக்களின் முழுமையான அதிகாரம் மற்றும் உரிமைகள் பற்றிய பார்வை சிதறுகிறது.

4. ஆகையினால் ஒருமித்த அணுகுமுறையின் தேவை உணரப்படுகின்றது.

தமிழ் மக்களின் நலனுக்காகவும், நீண்டகால எதிர்காலத்தை பாதுகாக்கவும், அரசுடன்

இணங்குபவர்களும், அரசியல் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களும் புரிந்துணர்வுடன் செயல்படுவது அத்தியாவசியமாக உள்ளது.

- மக்கள் நலனுக்கெர் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- இரு தரப்புகளும் மக்கள் நலன் என்பதை ஒரே தலையாய நோக்காகக் கொண்டு செயல்பட வேண்டும்.
- உடனடி தேவைகளையும், நீண்டகால அரசியல் உரிமைகளையும் ஒரே நேரத்தில் மேலெழுப்புவது முக்கியம்.
- தெளிவான ஒருமைப்பாடு அவசியமாகும்.
- அரசுடன் இணங்குபவர்கள் தங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசியல் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களின் ஆதரவை உறுதிசெய்ய வேண்டும்.
- அரசியல் போராளிகள், மதீதிய அரசுடன் செயல்படுபவர்களின் முயற்சிகளை குறைக்காமல், தங்களின் ஆதிக்கத்தை மக்களுக்கான ஒரு பரந்த திட்டமாகவே அமைக்க வேண்டும்.

5. வித்தியாசங்களை நிர்வகிக்க ஒருங்கிணைந்த செயலதிட்டம் அவசியம்.

தரப்பு மோதல்களை மாற்றவும், தமிழ் மக்களின் நலனுக்கான ஒருங்கிணைந்த பயணத்தை உறுதி செய்யவும், பின்வரும் வழிமுறைகளை மேற்கொள்ளலாம்:

1. தொகுப்பாளராக செயல் திறன் வாய்ந்த குழு:

- அரசுடன் இணங்குபவர்களும், அரசியல் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களும் ஒருங்கிணைந்த செயற்குழுவை அமைத்து தமிழ் மக்களின் தேவைகளுக்காக ஒரே குரலில் பேச வேண்டும்.

2. அறிக்கைத் தயாரிப்பு:

தொடர்ச்சி▼

# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

தொடர்ச்சி▲

தமிழ் மக்களின் உடனடி தேவைகள் மற்றும் நீண்டகால அரசியல் நோக்கங்கள் குறித்து ஒருங்கிணைந்த அறிக்கையைத் தயாரித்து, அரசுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

3. அரசியல் உரிமைகளுக்கு ஒத்த பங்களிப்பு அவசியம்.

- அரசுடன் இணங்குபவர்கள், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான முயற்சிகளை முழுமையாக ஆதரிக்க வேண்டும்.

4. நேரடி மக்கள்கூட்டங்கள் அவசியமானவை.

- பொதுமக்களின் உண்மையான தேவைகளை புரிந்து கொள்ள, இற தரப்பும் மக்கள் மத்தியில் நேரடியாக உரையாடல்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

## மக்களின் நலனுக்கான புதிய பாதை

இலங்கையின் தமிழ் மக்கள் தற்போது எதிர் கொள்ளும் சவால்களை கருத்தில் கொண்டு, அரசுடன் இணங்குபவர்களும், அரசியல் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களும் ஒரே நோக்கில் செயல்பட வேண்டிய நேரம் இது.

மக்களின் நலனை முன்னிலைப்படுத்தும் ஒருமித்த அணுகுமுறையே தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும்.

உடனடி தேவைகளையும், நீண்டகால உரிமைகளையும் சமநிலையாக மேலெழுப்பினால் மட்டுமே தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றத்தை கொண்டு வரலாம். பொது நலனுக்காக இணக்கமும் புரிந்துணர்வும் என்பவை நமது அடிப்படை பொறுப்புகள் ஆகும்.

புதிய அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்களின் நலனுக்கான வாய்ப்புகளை பயன்படுத்தி அரசியல் முன்னேற்றத்தை நோக்கி தமிழர் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கையின் புதிய அரசாங்கம் அமைந்துள்ள இந்த நேரத்தில், தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளைத் தீர்க்க இது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாக அமைந்திருக்கிறது. புதிய ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின் போது தமிழ் மக்களின் தேவைகள் குறித்து சாதகமாக உரையாடியமையோடு, அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய நேரத்தில், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம். ஏனெனில் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த தவறிவிட்டால் தமிழ் மக்களின் நலனுக்கான முக்கியமான வாய்ப்புகளை இழந்து விடலாம்.

1. தேந்தல் வாக்குறுதிகளை செயல்படுத்த தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தேர்தல் பிரச்சாரங்களில் புதிய ஜனாதிபதி தமிழ் மக்களின் மொழி உரிமைகள், பொதுவாழ்வாதார மேம்பாடு, காணாமல் போனவர்களின் பிரச்சினைகள், நில உரிமைகள் மற்றும் சமூகநீதி உள்ளிட்ட விடயங்களில் சாதகமாக உறுதியளித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான இவ்வாக்குறுதிகள் நடைமுறைக்கு வரும் வாய்ப்புகளை உறுதிப்படுத்த, தமிழ் அரசியல் கட்சிகள் சில விடயங்களைச் செய்ய வேண்டும்.

1. ஒருமித்த கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.
2. மத்திய அரசுடன் நேரடியாக பேச தயக்கம் காட்டாமல், ஒழுங்குமுறையான அழுத்தம் கொடுக்க வேண்டும்.
3. அரசியல் முரண்பாடுகளை கையாளாமல், தமிழ் மக்களின் நலனை முன்னிலையாகக் கொண்டு இணக்கமாகச் செயல்பட வேண்டும்.
4. முரண்பாடுகளைத் தவிர்த்து ஒன்றுபட வேண்டிய அவசியம் உள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே உள்ள முன்னேற்ற வெறுப்புகள் மற்றும் கொள்கை வேறுபாடுகள், தமிழ் மக்களின் நலனுக்கான போராட்டத்தில் பெரிய தடையாக அமைகின்றன.

- பெரிய பொருளாதார சவால்கள் மற்றும் மாற்றங்கள் நடக்கும் நேரம் இது.
- புதிய அரசாங்கம் தற்போது தனது உரிமையை நிலைநாட்ட விரும்பும் நிலையில் இருக்கிறது.
- இச்சூழலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவசர தேவைகளாக முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- அரசியல் போட்டிகளை மறந்து பொதுநலனில் கவனம் தேவையான சமயம் இதுதான்.
- முரண்பாடுகளை மேலும் தூண்டாமல், தமிழ் மக்களின் தீவிரக் கோரிக்கைகளை ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும்.
- தமிழ் மக்களுக்கு நன்மை பயக்க முடியாத தனித்தனி அணுகுமுறைகளை முற்றிலும் விலக்க வேண்டும்.

3. புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் வலியுறுத்துவது கட்டாயம்.

புதிய ஜனாதிபதிக்கு தமிழ் மக்களின் நலனுக்காக வெளிப்படையாக பேச முடியும் என்ற சில சாத்தியக்கூறுகள் உள்ளன. அதனால், இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக உள்ளது.

இந்தப் பின்னணியில் பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

அ.பயங்கரவாத தடுப்பு சட்டத் திருத்தம் அல்லது நீக்கம்.

தமிழ் மக்கள் மீது தவறாகப் பயன்படுத்தப்பட்ட இது போன்ற சட்டங்களைத் திருத்துமாறு அல்லது நீக்குமாறு புதிய அரசாங்கத்திற்கு வலியுறுத்த வேண்டும்.

ஆ. நில உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். முற்றுகை நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை மீண்டும் தமிழ் மக்களுக்கு திருப்பிக் கொடுக்க நடவடிக்கை தேவை.

இ. மொழி மற்றும் பண்பாட்டு உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும். தமிழ் மொழியின் அதிகாரப் பங்களிப்பு முழுமையாக அமல்படுத்தப்படும் நிலையை உறுதி செய்ய வேண்டும்.

ஈ. வரலாற்றுப் பிரச்சனைகளுக்கான சரியான தீர்வு அவசியம்.

தொடர்ச்சி▼

# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

**தொடர்ச்சி▲**

காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் இதில் பிரதானமானவை. காணாமல் போனவர்களின் நிலையை வெளிப்படுத்தவும், அவர்களின் குடும்பங்களுக்கு நீதியை வழங்கவும் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

அரசியல் கைதிகளின்(பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகால சிறை அனுபவிப்பவர்கள்), விடுதலையை துரிதப்படுத்த வேண்டும்.

உ.மொழி மற்றும் கல்வி உரிமைகள் பேணப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் மொழி உரிமைகள் முழுமையாக நடைமுறைக்கு வரும் வகையில் மத்தியஅரசுடன் பேச்சுவார்த்தை அவசியம்.

ஊ. மாகாண சபைகவில் அதிகாரங்களின் உறுதிப்பாடு கட்டாயம்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை விரிவாக்கி, சமஷ்டி அரசமைப்புக்கான அடித்தளத்தை அமைக்க வேண்டியது முக்கியம்.

அமையும்.

- கட்சிப் பாகுபாடுகளை மறந்து ஒருமித்த குரல் கொடுக்க வேண்டும்.
- மத்திய அரசுடன் ஊடாடும்போது, ஒருமித்த குரலால் மட்டுமே தமிழ் மக்களின் கோரிக்கைகள் வலிமையாக நிறுத்தப்பட முடியும்.

5. மக்கள் நலனுக்கான ஒருமைப்பாட்டின் அழைப்பு அத்தியாவசியமானது.

தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைவர்களிடமிருந்து ஒற்றுமையாக செயல்படும் அணுகுமுறையை எதிர்பார்க்கிறார்கள்.

- இணக்கமும் நம்பிக்கையும் கட்டமைக்கப்பட வேண்டும்.
- புதிய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை பயன்படுத்தி, தமிழ் மக்களின் தேவைகளை உடனடியாக தீர்க்க ஒரு ஒழுங்குமுறை கட்டமைப்பு தேவை.
- தமிழர் அரசியல் கட்சிகள் தங்கள் சொந்த இலக்குகளை மறந்து, மக்களின் நலனுக்காக ஒன்றுபட வேண்டும்.



**அமைதியான அழுத்தம்:**

- புதிய அரசாங்கத்தின் உறுதிமொழிகளை நினைவூட்டுவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்தஅவசர அழுத்தங்களை தருவதும் தமிழ் கட்சிகளின் பொறுப்பாகும்.

தமிழின மக்களின் நலனுக்காக கூட்டு ஒத்துழைப்பு, தமிழ் மக்களின் நலனுக்காகவும், அவர்களின்

எதிர்காலத்தை பாதுகாக்கவும், இப்போதைய புதிய அரசாங்கத்தின் நிலையை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

4. ஒன்றிணைந்த செயல்திட்டம் அவசியம்.

- தமிழ் அரசியல் கட்சிகள் தங்களின் நெருக்கமான கூட்டணிகளை உருவாக்கி, ஒன்று சேர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தியால் மட்டுமே பொதுநலனுக்கான அடிப்படைகள் வலுவாக

இலங்கையின் புதிய அரசாங்கம் ஒரு புதிய தொடக்கமாக இருக்கக்கூடிய நேரத்தில், தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் நீண்டகால அரசியல் உரிமைகள் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை நழுவ விடக் கூடாது.

தமிழ் அரசியல் கட்சிகள், ஒற்றுமையாக செயல்பட்டால் மட்டுமே –

1. மக்கள் நலனுக்கான உடனடி தேவைகள் நிறைவேற்றப்படும்.
2. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான நீண்டகால போராட்டத்திற்கு வலுவான அடித்தளம் உருவாகும்.

இது தமிழ் மக்களின் வரலாற்று நலனுக்காக ஒன்றிணைய வேண்டிய மக்கள் நலனின் நிமிடமாக உள்ளது. ஒற்றுமைமையே நமது மக்களின் வெற்றிக்கொடி ஆகும்.




# தமிழீழத்திற்காக போராடிய இனம் இப்போது ‘யாழ்ப்பாணத்துக்காக’ போராடுகின்றது......!


வி.எஸ்.சிவகரன்

2009 மே மாதத்துக்கு பின்னர் இலங்கை தீவில் தமிழ்த் தேசிய அரசியல் என்பது வாக்கு வணிகர்களான – அமாவாசையில் பிறந்த அரிஸ்டோட்டில்களிடம் – சிக்கித் தவிக்கிறது.

விடுதலை அரசியல் பற்றிய தூர நோக்குச் சிந்தனையோ, நோக்கு நிலையோ, அதனை அடையும் வழி தொடர்பான ஆழமான பார்வையோ, சித்தாந்தத் தெளிவோ எதுவும் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

காலத்துக்குக் காலம் தேர்தலில் எவ்விதமான சூழ்ச்சிகளையும், உணர்வு ரீதியான வாரத்தைகளையும் உபயோகித்து, தமிழ் மக்களை ஏமாற்றி, வாக்கப் பெற்று தமது சுகபோகத்தை அனுபவிக்கலாம் என்பதிலேயே இவர்கள் தொடர்ந்து அக்கறை செலுத்துகின்றனர். 16 ஆண்டுகளாக தமிழர் அரசியல் தேய்பிறையாகவே போகிறது. அதனை முழு இரவு அமாவாசையாக்க ஆளுக்கு ஆள் முண்டியடித்து முயல்கிறார்கள்.

காலக்கணக்கு இவர்களிடம் தமிழ் மக்களை சிக்குண்டு சிறைப்படுத்தி உள்ளது. கட்சிகளின் கூட்டுக்குள் குழப்பம். தனிக்கட்சிகளுக்குள்ளும் குழப்பம். மொத்தத்தில் கொள்கை முரண் கடந்து, தன்முரணிலேயே காலத்தையும் காலாவதியாக்கும் கைங்கரியத்தில் கதா பிரசங்கிகளாக ஏமாற்று வித்தை காட்டி மாயாஜாலமிட்டு வலம் வருகிறார்கள். நாளுக்கு நாள் நம்பிக்கை தளர்ந்து போகிறது. யாரை நம்புவது என்கின்ற நிலை கடந்து யாரையும் நம்ப முடியாது என்கின்ற தெளிவை நோக்கி தமிழ் மக்கள் மிகவும் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றனர். அந்தப் பயண பாதைக்கு வழித்தட அனுமதி வழங்கி ஆராத்தி எடுத்து வழிஅனுப்பி வைக்கிறது இந்த தமிழ்த் தேசியம் பேசும் திருட்டுக் கூட்டம். இவர்களால் கடந்த 16 ஆண்டுகளில் எந்த ஒரு விடயத்திலும் முன்னோக்கி நகர முடியவில்லை, நகர்த்தவும் இல்லை. தமிழர் நிலமும் தமிழ்த் தேசியமுமே கரைந்து போகிறது. அதைப் பற்றிய கவலையோ புரிதலோ எதுவும் இவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் இவர்களை நம்புகின்ற கடைக்கோடி சாமானிய மக்களை எப்படி ஏமாற்றலாம் என்று அவர்கள் கூட்டுச் சேர்ந்து கங்கணம் கட்டி ஆதாயச் சூதாடிகளாய் வலம் வருகிறார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே வடக்கிலே தமிழ்த் தேசியத்துக்கு ஏற்பட்ட சம்மட்டி அடிக்குத் தீர்வு காண வேண்டுமென எந்த கட்சியும் இதுவரை முயற்சிக்கவில்லை. தங்களது உட்கட்சிப் பிரச்சனையை தீர்க்க முடியாத தமிழரசுக் கட்சி, நீதிமன்ற நியாயாதிக்கத்தையே கேட்விக்குட்படுத்திய கட்சி. இன அழிப்புக்கு ஆதரவாக இருந்த இலங்கை நாடாளுமன்றத்தில் போய் நீதி கேட்கின்ற அளவில் அதனுடைய சித்தாந்தமும் தொலைநோக்கு பார்வையும் சீரிய எண்ணமும் அறிவாற்றலும் அருவியாக ஓடுகின்றன. ஐந்தாம் ஆண்டு மாணவர்களை விஞ்சியவர்கள் போல் இவர்களது ஆளுமையும் புலமையற்ற – புரிதலற்ற ஃ வார்த்தைகளும் சமூகத்தில் எள்ளி நகையாடலுக்கு உட்படுகிறது. எல்லாம் கொள்ளிவால் பேய்களாய் கொழுந்து விட்டு எரிகின்ற வாதங்களோடு, வார்த்தைகளோடு அள்ளி வீசுகிறார்கள் – அர்த்தமற்ற வார்த்தைகளை. சிங்களம் இவர்களை உமிழ்ந்து தள்ளும் என்பதனை உணர முடியாத ஆளுமையற்றவர்களையே தமிழ்த்தேசிய அரசியல் நம்பி இருக்கிறது என்றால் இந்த இனத்துக்கு விடுதலை இன்னும் நூறாண்டுகள் கடந்தாலும் கிடைக்கப் போவதில்லை.

தமிழீழம் என்கின்ற உயரிய இலட்சியத்தோடு ஆயிரக்கணக்கான மாவீரர்களையும் இலட்சக்கணக்கான பொது மக்களையும் இந்த மண்ணிலே ஆகுதி ஆக்கிய இனம் வழிநடத்த ஆளின்றி வழி நெடுக விழி நீர் விடுகிறது.

தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாகவே இந்தியா எப்பொழுதும் செயலாற்றி வருகிறது. அதனைத் தமிழ்க்கட்சி தலைவர்கள் புரிந்து கொள்ளாமல் இந்தியாவின் அடிமை சேவர்கர்களாக சேவகம் புரிந்து வருகிறார்கள். அடிமை சேவகத்தால் தமிழினத்திற்கு ஏதாவது ஆக்கபூர்வமாக நடந்ததா என்றால் முடிவு பூஜ்ஜியமே. தமிழ் மக்கள் விரும்பாத 13 அவது திருத்தத்தை மக்களின் விருப்பின்றி திணித்தார்கள். தமிழீழக் கோரிக்கையை சகல வழிகளிலும் நசுக்கினார்கள். இறுதி யுத்தத்தில் பிரதான பங்காளியாக இலங்கை அரசோடு துணை நின்று,

தொடர்ச்சி▼




# தமிழீழத்திற்காக போராடிய இனம் இப்போது 'யாழ்ப்பாணத்துக்காக' போராடுகின்றது......!

தொடர்ச்சி▲

இனஅழிப்பில் பங்குதாரராகி,முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஏற்படுத்தினார்கள். 2009 மே மாதத்தில் பிரணாப் முகர்ஜி, சிவசங்கர் மேனன், எம்.கே.நாராயணன் போன்றோர் எத்தனை தடவை இலங்கைக்கு வந்து போனார்கள் என்பதைப் பலர் நினைவிழந்து விட்டார்கள் போல், தமிழ் மக்களின் இருப்புக்குப் பாதிப்பு வருகின்ற போது எந்த வகையிலும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நிற்காத இந்தியா தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எம்மோடு துணையை நிற்கும் என இன்னும் நம்புகின்ற இந்தியாவின் அடிமை சேவகர்களான தமிழ்க்கட்சி தலைவர்களது நம்பிக்கைக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்க வேண்டி உள்ளது.

தமிழ் மக்களுக்காக எதுவும் செய்யாத இந்தியாவோடு ஏன் தமிழ் மக்கள் நிற்க வேண்டும் என்கின்ற கேள்வி இப்பொழுது பலர் மத்தியில் எழுகிறது.

யாழில் உள்ள துணைத் தூதரகம் எவரெல்லாம் இந்தியாவுக்கு எதிராக இருக்கிறார் என்று உளவு பார்க்கும் வேலையில் ஈடுபடுகின்ற பணியையே செய்கிறது. தமது சேவகர்களை அவ்வப்போது நலன்களின் ஊடாக திருப்திப்படுத்துகின்ற வேலையிலும் ஈடுபட்டு வருகிறது. தம்மிடம் நியாயம் கேட்கின்ற நபர்களுக்கு வீசா வழங்குவதை நிறுத்துகிறது. பலருக்குப் படிக்கப் போவதற்கு கூட வீசா மறுத்துள்ளனர். அவ்வளவு தூரம் அடிமட்டத்தில் சிந்திக்கிறார்கள். இந்தியா பிராந்திய வல்லரசு என்கின்ற ஒரு விம்பத்தை மட்டும் தனதாக்கிக் கொண்டு சீனாவோடு இலங்கை சங்கமம் ஆகி விடும் என்கின்ற அச்சத்தினால் இலங்கையோடு இணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான நாசகார கைங்கரிய செயலில் ஈடுபடுகின்ற இந்தியாவை நாம் புறக்கணிக்க வேண்டுமே தவிர, ஆதரிப்பதால் எந்தப் பயனும் இல்லை.

தமிழர் தாயகத்தில் பண்பாட்டு மண்டபம் என்கின்ற ஒன்றை நிறுவி விட்டு, அதற்கு உத்தியோக பூர்வ திறப்பு விழாவையும் நடத்திவிட்டு, இன்னும் அதை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பது இந்த நாட்டின் இறைமையை மீறுகின்ற செயலாகும். அயல்நாடு ஒன்று இன்னொரு நாட்டில் உள் விவகார நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்பது முற்றிலும் தவறான ஜனநாயக நிர்வாக முறைமையாகும். இதனை இலங்கை அரசு எப்படி சகித்துக் கொள்கிறதோ தெரியவில்லை. ஏனெனில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருந்தபோது பல்லாயிரம் கோடி ரூபச் கடன் வழங்கிய இந்தியா தனது இஷ்டப்படி வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலும் திட்டமிட்ட ரீதியில் இப்பொழுது முன்நகர்தல்களை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டது. யாழ்ப்பாண கலாசார நிலையம் எனப் பெயர் சூட்டினார்கள். பின்னர் திருட்டுத்தனமாக திருவள்ளுவர் பண்பாட்டு மையம் என பெயர் திரை நீக்கம் செய்தார்கள். இப்பொழுது மீண்டும் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் என்கிறார்கள். இது யாரை, யாரால், யாருக்கு, யாரை திருப்தி படுத்த, யாரை ஏமாற்ற இந்தப் பெயர் மாற்று நாடகம் அரங்கேறியது? தமிழ் நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கூட இதனை வரவேற்கிறார் என்றால் டெல்லியின் முடிவாகத்தான் இது இருக்கலாம்.

இங்கு வள்ளுவரை யாரும் எதிர்க்கவில்லை. எதிர்க்க வேண்டிய அவசியமும் இல்லை. வழமை போன்று இந்தியாவின் அடிமைகள் இந்த பெயர் மாற்ற விவகாரங்களில் மூச்சும் விடவில்லை. ஜனநாயகக் கூட்டணி என்கின்ற பெயரிலே உள்ள முன்னாள் ஆயுத குழுக்களும் இந்தியாவின் அடிமைத்துவ சேவகர்களும் மௌனிகள் ஆகி விட்டனர்.

எல்லோருக்கும் துரோகி பட்டம் கொடுத்து, இந்தியாவின் அடிமைகள் என வரிக்கு வரி விளித்து, தமிழர் அரசியலில் தாங்கள் மட்டும் தான் புனிதவான்கள் என மகுடம் சூடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதன் உத்தமபுத்திரத் தலைவர், செயலாளரும் இப்பொழுது இந்தியாவின் அடிமைகள் ஆகி விட்டார்களா? வழக்கம்போல குட்டியை விட்டு ஆழம் பார்க்கும் வேலையை தமிழரசுக்கட்சி இம்முறையும் செய்திருக்கிறது.

தனது கட்சிப் பிரச்சனையையே தீர்க்க முடியாமல் நீதிமன்றத்தில் திணறுகின்ற கட்சி – டசின்

தொடர்ச்சி▼

# தமிழீழத்திற்காக போராடிய இனம் இப்போது ‘யாழ்ப்பாணத்துக்காக’ போராடுகின்றது......!

**தொடர்ச்சி▲**

கணக்கில் ஆள்களை ஒழுக்காற்று நடவடிக்கை எனும் போர்வையிலே கட்சியை விட்டு அகற்றிக் கொண்டிருக்கும் கட்சி – எந்தக் கட்டுப்பாடும் இன்றி எல்லோரும் பிரசார பீரங்கிகளாக கருத்து கூறும் நெறிமுறை அற்ற கட்சி – தமிழ் மக்களுக்குப் பல்வேறு விதமான இன்னல்கள் வந்த போது எல்லாம் அமைதியாக இருக்கின்ற கட்சி – பெயர் மாற்ற விடயத்திற்கு நிகழ் நிலையில் அரசியல் குழுக் கூட்டத்தை கூட்டினார்களாம். அதில் கூட சிலரைக் காணவில்லை. இரண்டகமாக கட்சிக்கு தலைவரானவர் எல்லா பிற்போக்குத்தனத்திலும் முற்போக்கானவரை. சூதுவாது,சூழ்ச்சி எல்லாம் திரட்சியாகக் கொண்டவர்.

அடிமை சாசன கடிதத்தோடு துணைத்தூதரின் காலைக்கழுவாத சொற்களைப் பயன்படுத்தி கடிதம் எழுதி இருக்கிறார். வீரம் மிக்க தலைவர்களைக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சி, எதிலும் தலை வணங்காத சொற்களைக் கொண்ட தமிழில், ஆகக்கேவலமான கடிதமும் வேண்டுகையும் தமிழ் தேசியம் மட்டுமல்ல, விடுதலைக்கு நிமிர்ந்து நின்று போராடிய இனம் மட்டுமல்ல, தமிழ் மொழியும் கூட அவமானப்பட்டது. இந்த அடிமையாளர்களுக்கு தமிழ் மக்களை எழுதிக் கொடுத்தது யார்? சம்பந்தன் காட்டாத இராஜதந்திரத்தையா இவர்கள் காட்டி விடப் போகிறார்கள்? டெல்லியும், கொழும்பும் சம்பந்தனின் இராஜதந்திரத்திற்கு கடைசியில் என்ன பதில் அளித்தன?

கடைசியில் ஏதோ தமிழீழத்தை அடைந்து விட்டமை போல் அவர்களுக்கு அவசர அவசரமாக நன்றி கடிதத்தையும் எழுதி இருக்கிறார்கள் – நாங்கள் கேட்டபடி நீங்கள் செய்து விட்டீர்கள் என்று. ‘யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்’. திருவள்ளுவர் எப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு சொந்தமானார் என்று தெரியவில்லை.

வடிவேலுவின் நகைச்சுவை போல் தென்னை மரத்துக்கு ஒரு குத்து, ஏணிச் சின்னத்திற்கு ஒரு குத்து என இந்தியத் தூதரகத்தின் திருக்கூத்து. அதனை தாம் போராடிப் பெற்றதாக சிலர் புளகாங்கிதமடைந்து மகிழ்வை வெளிப்படுத்துகின்றனர். பரிதாபத்துக்குரிய தமிழினம்.

இப்பொழுது மண்டபத்தின் பெயர் என்ன? யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற திருவள்ளுவர் மண்டபமா? அல்லது யாழ்ப்பாணம் திருவள்ளுவர் மண்டபமா? எப்படி பார்த்தாலும் தமிழில் முரண்பாடு தான் எழும். தமிழர் அரசியலும் தமிழ்க்கட்சிகளும் முரண்பாட்டின் மொத்த வடிவம் தானே, இதில் மண்டபத்தின் பெயரும் சேர்ந்து கொண்டது. திருவள்ளுவரின் பண்பாட்டை யாழ்ப்பாணத்தில் நிலை நிறுத்துவதா? அல்லது யாழ்ப்பாணத்து பண்பாட்டை திருவள்ளுவர் மண்டபத்தில் நிகழ்த்துவதா? இதில் எது சரியானது என்று தெரியவில்லை. செந்தில், கவுண்டமணியின் வாழைப்பழ கதையாக தான் இந்தப் பெயர் மாற்றம் இருக்கிறது. ‘இதுதான் அது’, ‘அதுதான் இது’. இதில் பாவம் வள்ளுவர் இந்த சனாதனிகளிடம் அகப்பட்டுவிட்டார். இனி என்ன, காவி பூசி, பூணூல் அணிந்து, திருநீறிட்டு, விரைவில் பண்பாட்டு மையத்துக்கு பரிதாபத்தோடு வரப் போகிறார் வள்ளுவர்.

பாவம் அவரையே யார் என்று இதுவரைக்கும் தெரியாது. அவரது மதம், மொழி, இனம் எதுவும் இதுவரை ஆதாரபூர்வமாகவில்லை. வள்ளுவர் சமூகத்தை சேர்ந்தவராக இருப்பாரோ எனும் ஊகத்தில் தான் வள்ளுவர் என பெயர் சூட்டினார்கள். பின்னர் திருவையும் முன்னுக்குச் சேர்த்து விட்டனர். 1720இல் சென்னை மாகாண ஆளுநராக இருந்த அல்விஸ் என்பவருக்கு சமையல்காரராக இருந்த கந்தன் என்பவர் அடுப்பு எரிப்பதற்காய் வைத்திருந்த ஓலைச்சுவடியிலே புதிய ஓலைச் சுவடியாக இருக்கிறது என்பதனை அல்விஸுக்கு தெரியப்படுத்தியதன் மூலமே அந்த ஆளுநரும் தமிழ் படித்திருந்த காரணத்தினால் 1721 இல் திருக்குறள் வெளி வந்தாக கூறப்பட்டுகிறது. அதற்குப் பின்னர் பலர் பல்வேறு விதமான ஆய்வுகளையும் பதிலுரைகளையும் தமது அறிவுக்கு எட்டிய வரை வெளிப்படுத்தினர். இதில் 42,194 எழுத்துக்கள், பதினான்கு ஆயிரம் சொற்கள், 1330 குறட்பாக்கள், 133 அதிகாரங்கள், மூன்று பிரிவுகள். இதில் எங்கேயும் தமிழ் என்கின்ற ஒரு சொல் இடம் பெறவில்லை. உலகில் பைபிளுக்கு அடுத்ததாக அதிகம் மொழி பெயர்க்கப்பட்டது திருக்குறளாக காணப்படுகிறது. வகுப்புவாத சக்திகளும் மதவாதிகளும் திருவள்ளுவரை மதச்சாயம் பூசி சிற்றின்பம் காண்கிறார்கள். இந்தியாவில் மட்டுமின்றி, யாழிலும் கூட அவர்களது அடிமைத்துவ அடிவருடிகள் உண்டு. படித்தவர்கள் என்கின்ற போர்வையிலே உண்மையை மறைத்து விட்டு, தூதரகத்திற்கு சேவகம் செய்பவர்களாக வலம் வருகிறார்கள் சிலர். அவர்களுக்கு இந்தப் பெயர் மாற்ற விவகாரம் மிகுந்த மகிழ்வை கொடுத்திருக்கும். தமிழினத்திலே யாழில் உள்ளவர்களே அதிகம் படித்தவர்கள் எனத் தங்களை மார்தட்டி கொள்பவர்கள் பலர் இந்த விடயத்தில் மௌனிகளாக இருந்து விட்டனர்.

நூற்றுக்கணக்கான பேராசிரியர்கள் இருந்தும் என்ன பயன்? அநீதிக்கு எதிராக எழாத அறிவு பயனற்றது. ஏனெனில் இந்தியாவினுடைய ஏக விசுவாசத்தை வெளிக்காட்டி நல்ல பிள்ளைகளாய் பெயர் எடுப்பதற்காய். அப்பொழுது தானே இந்தியத்தூதரகம் அழைத்து அவர்களுக்கு சோறு கொடுக்கும், பரிசு கொடுக்கும், நிகழ்வில் முன் வரிசை இடம் கொடுக்கும், இந்தியாவுக்கு அழைத்துச் செல்லும்.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு வடக்கு, கிழக்கில் பல்வேறு விதமான நெருக்கடிகளை எல்லாம் கொடுக்கின்றது. அவற்றுக்கு எல்லாம் தீர்வு காண முற்படாத இந்திய அரசு பண்பாட்டு அழிப்பு விடயத்தை கையில் எடுத்திருக்கிறது. இதுவும் ஒரு வகை கட்டமைக்கப்பட்ட இன அழிப்பே. கடந்த 70 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்கு இந்தியா விசுவாசமாக நடந்து கொள்ளவும் இல்லை, அதற்குரிய சூழலை ஏற்படுத்தவும் இல்லை. இனியும் அறமில்லாத செயலிலுள்ள இந்தியாவை நம்புவதும், அவர்களின் அடிமை சேவர்களாக தமிழ்க் கட்சிகள் இருப்பதும் இன விடுதலைக்காக உயிர் நீர்த்தவர்களுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். இந்த துரோகத்தில் இருந்து இவர்கள் விடுபட வேண்டும். இல்லையேல் இவர்களை விரட்டுவதை தவிர தமிழினத்துக்கு வேறு வழியில்லை.

நாடு கேட்டுப் போராடிய இனம், இன்று பண்பாட்டு மண்டபத்தின் பெயருக்கு போராடும் நிலைக்கு தள்ளியமை தமிழ்த் தலைமைகளின் தோல்வியே...!

■



# யாழ். பல்கலையின் சட்டத்துறை ஏற்பாட்டில் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடாத்தப்படும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை, இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் “முறை செய்“ என்ற தலைப்பில் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை நடாத்துகிறது.

இம்மாநாடானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஹூவர் கலையரங்கில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

மாற்றத்திற்கான கருவியாக சட்டம் என்னும் சாரப்பட செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் உயர்நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தினராகவும், தகவல் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ஹிஷாலீ பின்டோ ஜெயவர்த்தன சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதர் சாய் முரளி, யாழ் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நீதிபதிகள், நீதிவான்கள், சட்டத்துறை சார் நிபுணர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.




















# கொக்கட்டிச்சோலையில் பொங்கல் விழா

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொக்கட்டிச்சோலை பண்டாரவெளியில் நேற்று சனிக்கிழமை பொங்கல் விழா இடம்பெற்றது.

பிரதி விவசாயப் பணிப்பாளர் எம். பரமேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இப்பொங்கல் விழாவில், விவசாய அமைச்சின் கிழக்கு மாகாண செயலாளர் எச்.ஈ.எம்.ஜீ. திஸநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் ஜெகன்நாத், கால்நடை வைத்திய அதிகாரி ஏ.முகுந்தன், உதவி விவசாய பணிப்பாளர்களான திருமதி சுகன்யா, சங்கீதா, அமீன், கருணாரத்தின, பேரின்பராஜா, வித்தியாசினி விவசாய காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர், விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பாரம்பரிய முறைப்படி அருவி வெட்டி பொங்கல் வைத்து வழிபாடு மேற்கொள்ளப்பட்டதோடு, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.









# தமிழகத்தின் நிலை கவலைக்கிடம்: குடியரசு தின செய்தியில் ஆளுநர்



"தேசியக் குறிக்கோளில், நமது மாநிலமான தமிழகத்துக்கு ஒரு பெரிய பங்களிப்பு இருக்கிறது. ஆனால், இது நடப்பது போலத் தெரியவில்லை. முக்கியமான குறியீடுகளில் தமிழகத்தின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. துரதிருஷ்டவசமாக, நமது மாநிலம் சரிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது."

– இவ்வாறு தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தனது குடியரசு தினச் செய்தியில் கூறியுள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி, தமிழக மக்களுக்கு ஆளுநர் விடுத்துள்ள செய்தி மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழகத்தின் சுமார் 1.5 லட்சம் கோடி முத்ரா கடன் பயனாளிகளில், கிட்டத்தட்ட பாதி பேர் பெண்கள் தான். 2047 ஆம் ஆண்டுக்குள்ளாக, முழுமையாக வளர்ச்சியடைந்த, தற்சார்புடையதாக, நமது நாட்டை ஆக்குவோம் என்ற மனமார்ந்த உறுதிமொழியை நாம் ஏற்றிருக்கிறோம். இதுவே நமது முன்னோர்களின் கனவாக இருந்தது. இந்த தேசியக் குறிக்கோளில் எந்த சமரசமும் கிடையாது. இதை நிறைவேற்றிக் காட்டுவது நம் அனைவரின் குறிக்கோளாகும். இந்த தேசியக் குறிக்கோளில், நமது மாநிலமான தமிழகத்துக்கு ஒரு பெரிய பங்களிப்பு இருக்கிறது. ஆனால் இது நடப்பது போலத் தெரியவில்லை. முக்கியமான குறியீடுகளின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, நமது மாநிலம் சரிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

கல்வி நிறுவன வளாகங்களைச் சுற்றி நிலவும் சட்டவிரோதமான போதைப் பொருள் அச்சுறுத்தல் தீவிரமான கவலையை அளிக்கிறது. சர்வதேச போதைப்பொருள் கூட்டமைப்புகளோடு தொடர்புடைய, சக்திவாய்ந்த போதைப் பொருள் கும்பல்கள் நமது மாநிலத்தில் இயங்கி வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இளைஞர்களுக்கு போதைப்பொருள் விற்கும் போது, அடிமட்டத்தில் இந்தக் குற்றங்களில் ஈடுபடுவோர், சிலவேளைகளில் அமலாக்கப் பிரிவுகளால் பிடிக்கப்பட்டாலும், போதைப் பொருள் கூட்டமைப்புக்களை இயக்கி வரும் பெரும்புள்ளிகள் தொடப்படுவதில்லை. போதைப்பொருள் கூட்டமைப்புக்களின் முக்கியப்புள்ளிகள் கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்படவில்லை என்று சொன்னால், பெருகி வரும் போதைப்பொருள் அபாயம், நமது எதிர்காலச் சந்ததிகளை அழித்துவிடும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான குற்றங்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு எதிரான பாலியல் தாக்குதல்கள், தமிழகத்தில் சீராக அதிகரித்து வருகின்றன. ஒருபுறம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வரும் வேளையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் மறுக்கப்படுகிறது.

2023 மற்றும் 2024-ம் ஆண்டுகளில், மிகப்பெரிய கள்ளச் சாராய பெருந்துயர்கள், மாநிலத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தின. சுமார் 100 பேர் இறந்தார்கள், பலநூறு குடும்பங்கள் கள்ளச் சாராயத்தால் நிலைகுலைந்து போயின. ஏழை மக்களின் மரணத்திலும், அழிவிலும் லாபம் அடையும் கள்ளச் சாராயத்தின் பெருமுதலைகள் சுதந்திரமாக இருக்கும் அதேவேளையில், கீழ்மட்டத்தில் இருக்கும் கையாள்கள் சிலர் மட்டுமே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையையே சமூகநீதியை நிலைநிறுத்த அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன், எம்.சி. ராஜாவைப் போன்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மாபெரும் தலைவர்கள் பற்றிப் பெருமிதம் கொள்ளும் மாநிலத்தில், தாழ்த்தப்பட்ட மக்களின் மீது இத்தகைய கொடுமைகள் நடக்கின்றன.

சில ஆண்டுகள் முன்புவரை, தனியார் முதலீட்டாளர்களால் மிகவும் விரும்பப்பட்ட மாநிலமாக நமது மாநிலம் இருந்தது. ஆனால் இன்று முதலீட்டாளர்கள் தமிழகத்தை விடுத்து மற்ற மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். 2021-22 ஆம் நிதியாண்டில், மாநிலங்களிலேயே அந்நிய நேரடி முதலீட்டை அதிக அளவில் ஈர்த்த 4 ஆவது மாநிலமாக தமிழகம் இருந்தோடு, 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவு முதலீட்டைப் பெற்றது.

2023-24 ஆம் ஆண்டில் நமது மாநிலம் 6 ஆவது நிலைக்கு வீழ்ச்சி கண்டதோடு, 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவே முதலீட்டைப் பெற்றது. குறைந்து வரும் தனியார் முதலீடுகள், தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளின் வேகத்தைக் குறைத்திருக்கிறது. இது மாநிலத்தின் பொருளாதாரத்திற்கும், வேலை வாய்ப்பிற்கும் பாதகமான விளைவுகளை உண்டாக்கும். முதலீட்டாளர்களை அச்சுறுத்தும் காரணங்களை நாம் அகற்றியாக வேண்டும்.

நாட்டிலேயே மிக அதிக தற்கொலை வீதம் உடைய மாநிலமாக தமிழகம் இருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சராசரி 12 தற்கொலைகள் என்பது தேசிய சராசரி. நமது மாநிலமான தமிழகத்திலோ, ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 26-க்கும் மேற்பட்ட தற்கொலைகள் என்ற நிலை இருக்கிறது. இது தேசிய சராசரியை விட இருமடங்குக்கும் அதிகமானது. நமது மாநிலத்தில் சுமார் 20,000 பேர்கள் ஒவ்வொரு ஆண்டும் தற்கொலை செய்து கொள்கிறார்கள். தமிழகம் தான் இந்தியாவின் தற்கொலைத் தலைநகரம் என்கிறார்கள். தீவிரமான சமூக மற்றும் பொருளாதார துயர் நிறைந்த சூழல், வளர்ச்சிக்கும் நீதிக்கும் எதிரானது. இதில் விரிவான உடனடி நடவடிக்கை தேவைப்படுகிறது.

2047 இல் வளர்ச்சியடைந்த பாரதமாக ஆகும் பாதையில் நமது தேசம் தன்னம்பிக்கையோடு பயணிக்கிறது. அதேநேரத்தில் உள்நாட்டிலும், அயல் நாடுகளிலும் , சில சுயநலமிகளும், எதிரி சக்திகளும் நமது முன்னேற்றத்தின் வேகத்தைக் குலைக்க முயற்சி செய்து வருகிறார்கள். இனம், சமயம், மொழி, சாதிகளின் பெயரால் நமது சமுதாயத்தைப் பிளவுபடுத்தி, அதைச் சிதைக்க முயற்சி செய்கிறார்கள். தவறான, எதிர்மறை கூற்றுகள் வாயிலாக, நமது மக்களின் நெஞ்சுரத்தை பலவீனப்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# 4 பெண் பணயக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ் அமைப்பு

இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையிலான போர் 15 மாதத்துக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250 இற்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாகப் பிடித்துச்சென்றனர்.

அதன்பின், தற்காலிக போர் நிறுத்தத்தின்போது 120 இற்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினிடம் இன்னும் 94 பணயக் கைதிகள் உள்ளனர். 34 பேர் உயிரிழந்துவிட்டனர்.

கட்டார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்தால் இருதரப்புக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் சமீபத்தில் அமலுக்கு வந்தது.

பணயக்கைதிகளான ரோமி கொனின் (வயது 24), ஏமி டமாரி (வயது 28), டோரன் ஸ்டான்பிரிசர் (வயது 31) ஆகிய 3 பேரை ஹமாஸ் அமைப்பு சமீபத்தில் விடுதலை செய்தது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் 6 வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

இந்நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாவது கட்டமாக 4 இளம் இஸ்ரேல் பெண் பணயக் கைதிகளை ஹமாஸ் விடுத்துள்ளது. விடுவிக்கப்பட்ட கரினா அரிவ், டேனிலா கில்போவா, நாமா லெவி மற்றும் லிரி அல்பாக் ஆகிய 4 பெண்கள் காசாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஈடாக 200 பாலஸ்தீனிய பணயக்கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க உள்ளது.

# பாரிய காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்டுள்ள லொஸ் ஏன்சலிஸ் பகுதிக்கு ட்ரம்ப் விஜயம்

பாரிய காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்டுள்ள கலிபோர்னியாவின் லொஸ் ஏன்சலிஸ் பகுதிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று பயணித்தார்.

அங்கு அழிவுக்குள்ளாகியுள்ள பகுதிகளின் அளவை மதிப்பிடுவதற்காக ஜனாதிபதி அங்கு சென்றார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கலிபோர்னியாவில் மீண்டும் காட்டுத்தீ பரவி வருகின்ற நிலையில் டொனால்ட் ட்ரம்ப் அங்கு சென்றுள்ளார்.




லொஸ் ஏன்சலிஸில் பரவிவரும் காட்டுத்தீயானது 79 சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கலிபோர்னியா – லொஸ் ஏஞ்சலீஸில் பரவிவரும் காட்டுத்தீ காரணமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன், 28 பேர் இதுவரை உயிரிழந்தனர்.

# ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தியது உக்ரைன்

ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைக் குறி வைத்து உக்ரைன் தாக்குதல் நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 121 ட்ரோன்களைப் பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், மொஸ்கோ நகரை குறிவைத்து இந்த ட்ரோன்கள் ஏவப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.

ரியாசான் மற்றும் மொஸ்கோ உட்பட 13 பிராந்தியங்களில் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய ராசி பலன்கள் - 26.01.2025




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று தோல் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் வைப்பது நல்லது. மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்களுக்குக் கூட எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப்படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.

இன்று சளி, இருமல் பாதிப்பு காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று அதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவு முறை காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.




இன்று கடினமான சூழ்நிலை கானப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

பணியிடத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப்பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.01.2025




இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# யானையின் தாக்குதலுக்கு இலக்கானவர் திருமலை வைத்தியசாலையில் அனுமதி!



(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

திருகோணமலை – கம்பகொட்ட பகுதியில் யானை தாக்கியதில் நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முந்தின்சம் மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் திருகோணமலை, எத்தாபெந்தி வெவ– பகுதியைச் சேர்ந்த சிந்தக விமலசேன (42வயது) எனவும் தெரிய வந்துள்ளது.

வயல் காவலுக்குச் சென்ற இவர் வயலுக்குள் நின்ற யானையை விரட்ட முற்பட்டபோது யானை துரத்தித் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தற்போது காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.